செ.வெ.எண்.76 நாள்.20.11.2026

பத்திரிக்கை செய்தி

மாவட்ட நலவாழ்வு சங்கம், அரியலூர் மாவட்டம்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை

தேசிய நலவாழ்வுக்குழுமம் / மாவட்ட நலவாழ்வு சங்கம், அரியலூர் மாவட்டம்– ஜெயங்கொண்டம் அரசு மாவட்ட மருத்துவமனையில், செயல்பட்டு வரும் விரிவான அவசர கால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு (CEMoNC) மையங்களில் (SNCU மற்றும் PICU உட்பட) தேசிய நலவாழ்வு குழும திட்டத்தின் கீழ் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 13 ஒப்பந்த செவிலியர்களின் பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமாக செவிலியர் (Staff Nurse) பணியிடங்களில் பணிபுரிய தகுதியான நபர்களிடமிருந்து 21.11.2026 முதல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாவட்ட நலவாழ்வு அலுவலகத்தில் 04.12.2026 அன்று மாலை 5 மணிக்குள் வந்து சேரவேண்டும்.

வ.எண்	பதவியின்பெயர்	மொத்த காலியிடங்கள்	மாத ஊதியம்	வயது	தகுதி
1.	செவிலியர் (Staff Nurse) – ஒப்பந்த அடிப்படையில்	13	ரூ.21000/ (மாதம் ஒன்றுக்கு)	50 வயது வரை (அறிவிப்பு கடிதம் வெளிட்ட நாளில்)	செவிலியர் பட்டயபடிப்பு (GNM) அல்லது இளங்கலை செவிலியர் பட்டம் (B.Sc. Nursing) – அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் செவிலியர் கல்லூரி – மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்டது. தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் பதிவு கட்டாயம்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

செயற்செயலாளர் / மாவட்ட சுகாதார அலுவலர் மாவட்ட நலவாழ்வு சங்கம், மாவட்ட சுகாதார அலுவலகம் அரசு பல்துறை அலுவலக வளாகம் ஜெயங்கொண்டம் ரோடு அரியலூர். அஞ்சல் எண் 621704.

குறிப்பு:

1. விண்ணப்ப படிவங்கள்/ மாவட்ட வாரியான மற்றும் நிறுவன வாரியான காலியிடங்கள் விபரம் தேசிய நலவாழ்வுக்குழும (https://nhm.tn.gov.in/) & https:// ariyalur.nic.in வலைதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தகுந்த சான்றிதழ்கள் நகல்களுடன் மேலே குறிப்பிட மாவட்ட நலவாழ்வு சங்க அலுவலகத்திற்கு 04.12.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.
3. சான்றிதழ்கள் இணைக்கப்படாமலோ, உரிய சாதிச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ் இல்லாமலோ உள்ள விண்ணப்பங்கள் தகுதியற்றதாக கருதி நிராகரிக்கப்படும்.
4. இப்பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமான ஒப்பந்த அடிப்படையிலானவை பணிநிரந்தரம் கோர எவ்வித உரிமையும் இல்லை. தேர்வு செய்யப்படுபவர்கள் அரசாணைஎண்: 427 மருத்துவம் –மக்கள் நல்வாழ்வுத்துறை நாள் 18.11.2026 படி பணியமர்த்தபடுவார்கள்.
5. காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை மாறுதலுக்கு உட்பட்டது

செய்தி வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.